
# நான்கு ராஜ்ஜியங்களின் இரகசியம் - பகுதி - 3

**(The Mystery of The Four Kingdoms)**
**Part – III**
**(07 June – 2015)**




**போதகர் : A. சாமுவேல்**
**கல்வாரி கூடாரம், சென்னை - 600 087.**


உலகத்தின் ராஜ்யங்களும் கிறிஸ்துவின் ராஜ்யமும்
தானியேல் 2:31-45
பாபிலோனிய ராஜ்யம்
தலை - பொன்
நேபுகாத்நேச்சர்
( 605 BC - 539 BC )
சிங்கம்
மேதிய பெர்சிய ராஜ்யம்
மார்பு - வெள்ளி
தரியு ராஜா
( 539 BC - 331 BC )
கரடி
கிரேக்க ராஜ்யம்
வயிறு - வெண்கலம்
மகா அலெக்ஸாண்டர்
( 331BC - 146 BC )
சிவிங்கி
ரோம ராஜ்யம்
கால்கள் - இரும்பு
நீரோ மன்னன்
( 146 BC - 1453 AD )
பயங்கரமான மிருகம்
பிரிக்கப்பட்ட ராஜ்யம்
பாதங்கள் - இரும்பும் களிமண்ணும்
கத்தோலிக் பிராட்டஸ்டன்ட்
போப்புவின் ரோமாபுரி
( 1453 AD - CHRIST KINGDOM )
கையால்
பெயர்க்கப்படாத கல்
- நியாயத்தீர்ப்பு
கல் - பூமியெல்லாம் நிரப்பிற்று
கிறிஸ்துவின் ராஜ்யம்

# நான்கு ராஜ்ஜியங்களின் இரகசியம் - பகுதி - 3

அருமையானவர்களே! நான்கு இராஜ்யங்களைக் குறித்து முதல் பாகத்திலும், நான்காவது ராஜ்யத்தைக் குறித்து இரண்டாம் பாகத்திலும் பார்த்தோம். இப்பொழுது தேவன் நான்காவது ராஜ்யத்தை அழித்துத் தன்னுடைய ராஜ்யத்தைக் கொண்டு வருவதை மூன்றாவது பாகத்தில் பார்க்கலாம்.

- தானியேல் இரண்டாம், ஏழாம், எட்டாம் அதிகாரங்களில் இதைக் குறித்து நாம் வாசிக்கிறோம். அதேபோல் வெளிப்படுத்தின விசேஷம் 12-ம், 13-ம், 17-ம் அதிகாரங்களிலும் இதைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது.
- தானியேலின் புஸ்தகம் வெளிப்படுத்தின விசேஷத்திற்கு இணையாக இருக்கிறது. தானியேல் புஸ்தகத்தைக் காட்டிலும் வெளிப்படுத்தின விசேஷத்தில் மிக விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.
- கிறிஸ்து பிறப்பதற்கு 600 வருஷத்திற்கு முன்பாக தானியேல் வாழ்ந்தான். தானியேல் கண்ட அதே தரிசனத்தைத்தான் யோவான் காண்கிறான்.
- அத்தரிசனத்தை யோவான் கண்டு இப்பொழுது, கிட்டத்தட்ட இரண்டாயிரம் வருஷம் ஆகிறது. அந்தத்தரிசனங்கள் நிறைவேறி முடிய வேண்டிய நேரத்தில் நாம் இருக்கிறோம்.

தானியேல் 2-ம் அதிகாரத்தில் அந்தச் சிலையை நாம் காணும்போது இதோ தலை பொன்னாக இருக்கிறது; மார்பும் அதனுடைய புயங்களும் வெள்ளியாய் இருக்கிறது; வயிறு வெண்கலம்; இரண்டு கால்களும் இரும்பு; பாதங்களும் பத்து விரல்களும் களிமண்ணும் இரும்புமாக இருக்கிறது. கையால் பெயர்க்கப்படாத ஒரு கல் மலையிலிருந்து உருண்டு வந்து அந்தச் சிலையின் பாதத்திலே மோதும் பொழுது அந்த இரும்பும், வெண்கலமும், வெள்ளியும், பொன்னும், களிமண்ணும் எல்லாமே நொறுங்கித் தூளாக மாறி காற்றிலே போய்விட்டது. அந்த ராஜ்யங்கள் அழிந்து போயிற்று. ஆனால் அந்தக் கல்லோ ஒரு பெரிய பர்வதமாகி பூமியை நிரப்பிவிட்டது என்று வாசிக்கிறோம்.

தானியேல் 2 : 44

அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால்பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்.

இதோ அது நடக்கவேண்டிய நேரத்தில் நாம் இருக்கிறோம்.

மணவாட்டி எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு ஏழு வருஷம் அந்திக்கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்படும். ஏழு வருஷத்தில் மூன்றரை வருஷம் அந்திக்கிறிஸ்து ஜனங்களைச் சமாதானமாய்ப் பிரியப்படுத்துகிறவனாக இருப்பான். மூன்றரை வருஷத்திற்குப் பிறகு அவன் பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணி மிருகத்தின் முத்திரையைத் தரிக்காத அனைவரையும் கொலை செய்துவிடுவான். அந்த மூன்றரை வருஷ முடிவிலே அர்மெகெதோன் யுத்தம் அதாவது மூன்றாவது உலகயுத்தத்தில் (3rd World War) உலகம் அழிந்து போகும். பின்பு தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்.

பாபிலோனிய ராஜ்யம்; மேதியபெர்சிய ராஜ்யம்; கிரேக்க ராஜ்யம் இவைகள் கிறிஸ்துவுக்கு முன்னால் இருந்த ராஜ்யங்கள். அதற்குப் பின்பு இயேசு கிறிஸ்துவின் காலத்திலே ரோம ராஜ்யம் ஆரம்பித்தது. கி.மு. 63 லிருந்து கி.பி. 476 வரைக்கும் ரோம ராஜ்யம் இருந்தது.

இப்பொழுது நாம் பாதத்தின் நாட்களிலே இருக்கிறோம். ரோம ராஜ்யம் எல்லா ராஜ்யத்துக்குள்ளும் பரவிவிட்டது கத்தோலிக்க மார்க்கம் உலகமெங்கிலும் இருக்கிறது. இதில் 124 கோடி மக்கள் இருக்கிறார்கள். ரோமராஜ்யம் இரும்பு; இந்த இரும்பு உலகமெங்கிலும் பரவியிருக்கிறது. இரும்பும், களிமண்ணுமான பாதத்தின் நாட்களில் இருக்கிறோம்.

மேற்கு, கிழக்கு நாடுகளான அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் கடைசியில் யுத்தம் ஏற்படும். அந்தக் கல்லானது மோதும். இப்பொழுது இந்தக்கல் புறப்பட்டு வந்திருக்கிறது; ராஜ்யங்கள் உடைந்து கொண்டிருக்கிறது. சீக்கிரம் அது தவிடு பொடியாக மாறும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். தேவனுடைய ராஜ்யம் வரக்காத்துக்கொண்டிருக்கிறோம்.

- ❖ முதலாம் மிருகம் சிங்கம்; கழுகின் இறக்கையுடையதாய் இருந்தது. இது நேபுகாத் நேச்சாருடைய பாபிலோனிய ராஜ்யம்.
- ❖ அதன் பின்பு கரடி; மேதியபெர்சிய சாம்ராஜ்யம். அதன் வாயிலே மூன்று விலா எலும்புகளைக் கவ்விக்கொண்டிருக்கிறது. மூன்று எலும்புகள் என்னவென்றால் பெர்சியா, எகிப்து, லிபியா இவைகளை அந்த ராஜ்யம் கைப்பற்றியது.
- ❖ இதற்குப்பின்பு சிவிங்கி; கிரேக்க மன்னன் அலெக்சாண்டருடைய ராஜ்யம். அதற்கு நான்கு தலைகள் இருந்தது. அது கழுகின் இறக்கைகளைக்கொண்டு மிக வேகமாகப் பரவிய பெரிய ராஜ்யமாக மாறினது.
- ❖ அலெக்சாண்டருக்குப்பின்பு நான்கு ராஜ்யங்கள் தோன்றின. அலெக்சாண்டருடைய நான்கு தலைவர்கள் நான்கு ராஜ்யங்களாகப் பங்கிட்டுக்கொண்டார்கள்.
- ❖ அதன் பின்பு கெடிதும் பயங்கரமான மிருகம்; ரோம ராஜ்யம்; எல்லா வல்லமையும் இதற்குக் கொடுக்கப்படும். பத்துக்கொம்புகள் இருந்தது. ஒரு சின்ன கொம்பு வந்தது. அதுதான் கடைசி போப். இந்தப்போப் வரும்போது ரோம ராஜ்யமானது அழிக்கப்படும்.
- ❖ தானியேல் 8ஆம் அதிகாரத்தில், தானியேல் கடைசி இரண்டு ராஜ்யங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். இரண்டு ராஜ்யங்கள் ஒன்று ஆட்டுக்கடா, இன்னொன்று வெள்ளாட்டுக்கடா.
- ❖ முதலாவது ஆட்டுக்கடாவைப் பார்த்துச் சொல்லும் பொழுது அது இரண்டு கொம்புகளை உடையதாக இருக்கிறது; முன்பு வந்த கொம்பை விட, பின்பு வந்த கொம்பு உயர்ந்ததாக இருந்தது.
- ❖ அதன் பின்பு, இரண்டு கண்களுக்கு இடையே ஒரு கொம்பை உடையதான வெள்ளாட்டுக்கடா வருகிறது. இது அந்த ஆட்டுக்கடாவை மோதி மிதித்துப் போடுகிறது. இதன் ஒரு கொம்பு முறிக்கப்பட்டு நாலு கொம்புகள் வந்தது.
- ❖ அதன் பின்பு அந்த நாலு கொம்பிலிருந்து ஒரு சின்னதான கொம்பு வந்தது. அது மிகவும் பயங்கரமாய் இருந்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது.
- ❖ அங்கே முதலில் கூறியபொழுது பத்துக்கொம்பில் ஒரு சின்னதான கொம்பு வந்தது. இங்கே நான்கு கொம்புகளிலிருந்து ஒரு சின்னதான கொம்பு வந்ததாம். இரண்டும் எவ்வளவு வித்தியாசம் பாருங்கள்.
- ❖ அந்த சின்ன கொம்பு அன்றாட பலியை நீக்கிப்போட்டு, பரிசுத்தவான்களைக் கொலை செய்தது. அதைக் குறித்து என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்றால், மூர்க்க முகமும், சூதும், வஞ்சிக்கிற பேச்சுமுள்ள சாமர்த்தியமான ஒரு ராஜா எழும்புவான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

- ❖ கடைசியில் அந்த ராஜ்யமும் அழிந்து போகும். எல்லா ராஜ்யங்களும் அழிக்கப்பட்டு தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகிறது. நாம் அந்த நேரத்தில் இருக்கிறோம்.
- ❖ தானியேல் சூசான் அரண்மனையிலே இருக்கிறான். அவன் தரிசனத்திலே ஊலாய் என்ற நதியிலே இருப்பதைப் போன்று காண்கிறான்.
- ❖ நேபுகாத்நேச்சார் கண்ட சிலையைப் பற்றின சொப்பனத்திற்கு, 50 ஆண்டுகளுக்குப் பின்பு பெல்ஷாத்சாரின் காலத்தில், தானியேல் நான்கு மிருகங்களைப்பற்றிய தரிசனத்தைக் கண்டான். இப்பொழுது இரண்டு மிருகங்களைக் கண்டான் ஒன்று வெள்ளாட்டுக்கடா மற்றொன்று செம்மறி ஆட்டுக்கடா. நாம் இதைக் கவனிக்கும்போது ஒரு ஆட்டுக்கடா ஆற்றுக்கு முன்பாக நின்றது. அதற்கு இரண்டு கொம்புகள் உயர்ந்தவைகளாய் இருந்தது.

தானி : 8 : 3

நான் என் கண்களை ஏறெடுத்துப்பார்த்தேன்; இதோ, இரண்டு கொம்புகளுள்ள ஒரு ஆட்டுக்கடா ஆற்றிற்கு முன்பாக நின்றது; அதின் இரண்டு கொம்புகளும் உயர்ந்தவைகளாயிருந்தது; ஆகிலும் அவைகளில் ஒன்று மற்றதைப்பார்க்கிலும் உயர்ந்திருந்தது; உயர்ந்தகொம்பு பிந்தி முளைத்தெழும்பிற்று.

- ❖ இப்பொழுது நாம் அறிந்து கொள்வதென்னவென்றால் முதலாவது அந்த நாலு ராஜ்யங்கள் எப்படி அழியுமென்றும் தேவனுடைய ராஜ்யம் எப்படி ஸ்தாபிக்கப்படுமென்றும், அதன் பின்பு கிறிஸ்து எப்படி நியாயாதிபதியாய் வருவார் என்பதைப் பார்ப்போம்!
- ❖ தானியேல் இரண்டு கொம்புகளையுடைய ஒரு ஆட்டுக்கடாவைக் காண்கிறான். அந்த இரண்டு கொம்புகளில் பின்னால் வந்த கொம்பு முன்னால் வந்த கொம்பைக் காட்டிலும் உயரமாய் இருந்தது.
- ❖ அதாவது மேதியனாகிய தரியு வந்து பாபிலோனிய ராஜ்யத்தை அழித்து அதைப் பெற்றுக்கொண்டான்.
- ❖ பின்பு பெர்சிய ராஜ்யத்தைச் சேர்ந்த கோரேஸ் அதிக வல்லமையோடு வந்து தரியுவின் ராஜ்யத்தை மேற்கொண்டான். அது தான் முந்தி வந்த கொம்பைப் பார்க்கிலும் பிந்தி வந்த கொம்பு அதிக வல்லமையோடு வந்தது என்று சொல்லப்பட்டது. தரியு மற்றும் கோரேஸ் இவர்கள் தான் இரண்டு கொம்புகள். கொம்புகள் ஆட்சி அதிகாரத்தையும் வல்லமையையும் குறிக்கிறது.

பெர்சிய ராஜ்யம் மேதிய ராஜ்யத்தைப் பார்க்கிலும் வல்லமையாக வந்து அதனை அழித்தது. அதேபோல் தான் நல்ல மனிதன் நாட்டை ஆளாமல், கெட்ட மனிதன் நாட்டை ஆண்டால் எல்லாரையும் முட்டித் தள்ளிவிடுவான். நாட்டை ஆளுவதற்கு நல்ல குணம் (Character) தேவை. நல்ல குணாதிசயங்கள் இல்லாத மனுஷர் வந்து ஆளுகை செய்தால் வழியில் யார் குறுக்கே வந்தாலும் அவர்களை முட்டித்தள்ளிவிடுவார்கள். பைபிளில் நமக்கு எழுதப்பட்டிருக்கிறது.

இயேசு கிறிஸ்து மட்டும்தான் உலகத்தை ஆளுகைச் செய்யத் தகுதியுள்ளவராய் இருக்கிறார். அவரிடம் எல்லா நல்ல குணாதிசயங்களும் இருக்கிறது. அவர் நல்லவர்; அன்புள்ளவர்; தாழ்மையுள்ளவர்; சாந்தமுள்ளவர் அவர்தான் உலகத்தை ஆளத் தகுதியானவர். நாமும் அவ்விதமான குணங்களைப் பெற்றால் அவரோடு கூட ஆளுகை செய்யலாம்.

நாம் அவரோடு ஆளுகை செய்ய விசுவாசத்தோடு வல்லமையும், வல்லமையோடு ஞானமும், ஞானத்தோடு தன்னடக்கமும், தன்னடக்கத்தோடு பொறுமையும், பொறுமையோடு தேவபக்தியும், தேவபக்தியோடு சகோதர சிநேகமும், சகோதர சிநேகத்தோடு அன்பும் நமக்கு வந்தால் நாம் ஆளுகைச் செய்ய தகுதியுள்ளவர்களாய் இருப்போம். குணாதிசயம் இல்லையென்றால் ஆளுகை செய்யத் தகுதியே இல்லை.

மேதிய சாம்ராஜ்யம் ஜெயம் கொண்ட ராஜ்யமாக மாறினது. அது தான் அந்த வெள்ளாட்டுக்கடா.

தானி 8 : 5

நான் அதைக் கவனித்துக்கொண்டிருக்கையில், இதோ, மேற்கேயிருந்து ஒரு வெள்ளாட்டுக்கடா நிலத்திலே கால் பாவாமல் தேசத்தின்மீதெங்கும் சென்றது; அந்த வெள்ளாட்டுக்கடாவின் கண்களுக்கு நடுவே விசேஷித்த ஒரு கொம்பு இருந்தது.

இந்த வெள்ளாட்டுக்கடா மிக வேகமாக கால் தரையிலே பதியாமல் பறந்து கொண்டு வருவது போல் வருகிறது. சில பிள்ளைகள் தங்கள் கால்கள் தரையில் பதியாமல் நுனிக்காலில் ஓடுவார்கள். அதைப் போலவே அலெக்சாண்டர் மிக வேகமாக சொற்ப காலத்தில் உலகத்திலே பல பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டான். மாமன்னன் அலெக்சாண்டர் உலகத்தையே ஜெயித்துத் தன் அதிகாரத்துக்குள் கொண்டு வர வேண்டுமென நினைத்தான். ஆனால் 33 வயதிலே மரித்துவிட்டான்.

மரிக்கும்போது அவன் என்ன சொன்னானென்றால்; என் சவப்பெட்டியில் இரண்டு பக்கத்திலும் துளைப்போட்டு என் இரண்டு கைகளையும் வெளியே தொங்க விட்டு பெட்டியைச் சுமந்து செல்லுங்கள். ஏனென்றால், நான் உலகத்தையே ஆக்கிரமித்துக் கொள்ளலாம் என்று நினைத்தேன்; ஆனால்நான் வெறுங்கையோடு வந்தேன், வெறுங்கையோடு போகிறேன் என்று கூறியதாகச் சரித்திரம் சொல்லுகிறது. அதே போல் இரண்டு கைகளையும் சவப்பெட்டியின் துளையின் வழியாகத் தொங்க விட்டே அவனை அடக்கம் பண்ணினார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அதேபோல் நாமும் நிர்வாணியாய் வந்தோம்; நிர்வாணியாய் இந்த உலகத்தைவிட்டுப் போகிறோம்; நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை; ஒன்றும் கொண்டு போவதுமில்லை.

இரண்டு கண்களுக்கு நடுவே விசேஷித்த ஒரு கொம்பு இருந்தது. அந்தக் கொம்புதான்; மாமன்னன் அலெக்சாண்டர். அதன்பின்பு,

தானி 8-7 ம் வசனத்திலே என்ன வாசிக்கிறோமென்றால் அந்த வெள்ளாட்டுக்கடா, ஆட்டுக்கடாவை முட்டித்தள்ளி அதை மிதித்துப்போட்டது. மேதிய பெர்சிய ராஜ்யத்தை கிரேக்க ராஜ்யம் மேற்கொண்டது. ஒரு ராஜ்யம் போய் இன்னொரு ராஜ்யம் வரும். ஒரு கட்சி தோல்வியடைந்து இன்னொரு கட்சி ஜெயிக்கிறது. இவ்வாறு தான் உலகத்தில் நடந்து கொண்டிருக்கிறது.

ஒரு ராஜ்யம் பலம் அடைந்து இன்னொரு ராஜ்யத்தை முட்டித் தள்ளி ஜெயிக்கிறது. அந்த வெள்ளாட்டுக்கடாவின் கண்களுக்கு நடுவே இருந்த ஒரு கொம்பு முறிந்து போயிற்று. அதாவது, அலெக்சாண்டர் சீக்கிரமாய் மரித்துப்போனார். பின்பு வேறு நான்கு கொம்புகள் வந்தது.

தானி 8 : 8

அப்பொழுது வெள்ளாட்டுக்கடா மிகுதியும் வல்லமைகொண்டது; அது பலங்கொண்டிருக்கையில், அந்தப் பெரிய கொம்பு முறிந்துபோயிற்று; அதற்குப் பதிலாக ஆகாயத்தின் நாலுதிசைகளுக்கும் எதிராய் விசேஷித்த நாலுகொம்புகள் முளைத்தெழும்பினது.

தானி 8 : 9

அவைகளில் ஒன்றிலிருந்து சின்னதான ஒரு கொம்பு புறப்பட்டு தெற்குக்கும், கிழக்குக்கும் எதிராகவும், சிங்காரமான தேசத்துக்கு நேராகவும் மிகவும் பெரியதாயிற்று.

கி.மு. 323-ல் அலெக்சாண்டர் மரித்துப்போனார். அவர் கைப்பற்றின ராஜ்யத்திற்காக அவருடைய நான்கு சேனைத் தலைவர்களும் போட்டிப் போட்டு அந்த ராஜ்யத்தைப் பங்கு வைத்துக் கொண்டார்கள். தானி 7-ம் அதிகாரத்திலே 6-ம், 8-ம் வசனங்களிலே, நாலு தலைகள் நாலு கொம்புகள் என்று இருக்கிறது. இரண்டும் ஒரே ராஜ்யத்தைத்தான் குறிக்கிறது.

அந்த நாலு கொம்புகளில் ஒரு கொம்பில் சின்னதான ஒரு கொம்பு வந்து சிங்காரமான தேசத்துக்கு நேராக மிகவும் பெரியதாயிற்று. சிங்காரமான தேசம் என்றால் எருசலேம். யூதாவின் ராஜ்யம். தேவனுடைய பிள்ளைகள் இருக்கிறதான இடம். அந்த நான்கு சேனைத்தலைவர்கள் டோலமி, செலுக்கஸ், கஸண்டர், லசிமேக்கர்ஸ் இவர்களில் செலுக்கஸ் என்ற தலைவனின் சந்ததியிலிருந்து வந்த எட்டாவது ராஜாதான் ஆண்டியோகிஸ் IV எப்பாபினிஸ். அவன் கி.மு. 175 லிருந்து கி.மு. 163 வரைக்கும் கிட்டத்தட்ட 12 வருஷங்கள் ஆளுகை செய்திருக்கிறான். அவன் இஸ்ரவேல் ஜனங்களை ஆராதனை செய்யக் கூடாதபடி தடைபண்ணி விட்டான். அந்தச் சின்ன கொம்பு ஆராதனை செய்யக் கூடாது என்றது. அந்தச் சின்ன கொம்பு ஆண்டியோகிஸ் IV எப்பாபினிஸ் என்பவன். அவன் ஆட்சியின் கீழ் மெசபத்தோமியா, பெர்சியா இருந்தது. அவன் கி.மு. 167 வருஷத்திலே தேவாலயத்தின் பலிபீடத்தில் பன்றியை பலிசெலுத்தி அதைத் தீட்டுப்படுத்தி விட்டான். இதெல்லாம் நடந்த சம்பவம்.

யூதமெக்கபிஸ் (Judas Maccabaeus) என்ற ஆசாரியன் அதற்கு விரோதமாகப் போராடி மூன்று வருஷத்திற்குப் பின்பு அந்த தேவாலயத்தைச் சுத்திகரித்து மறுபடியும் தேவாலயத்தில் ஆராதனை செய்யும்படி ஆயத்தப்படுத்தினார்கள். இது மட்டுமல்லாமல் ஆண்டியோஸ் எப்பாபினிஸ் விருத்தசேதனத்தைத் தடை பண்ணினான். பைபிள் வாசிக்க விடாதபடி தடைசெய்து அவர்களைக் கொலை செய்தான். அவ்வளவு பொல்லாதவனாய் இருந்தான். இதைக் குறித்து தானியேல் எழுநூறு வருஷத்துக்கு முன்னதாகவே எழுதி வைத்திருக்கிறான். இவ்விதமான காரியம் அந்த சின்ன கொம்பு செய்யும். அவன் மூர்க்கமுகமும் சூதுமான பேச்சுமுள்ள சாமர்த்தியமான ஒரு ராஜா என்று நாம் தானி 8 : 23-ம் வசனத்திலே வாசிக்கிறோம். அவன் வந்து அன்றாட பலியை நிறுத்திவிடுவான்.

தானி 8:11

அது சேனையினுடைய அதிபதி பரியந்தமும் தன்னை உயர்த்தி, அவரிடத்திலிருந்து அன்றாட பலியை நீக்கிற்று; அவருடைய பரிசுத்த ஸ்தானம் தள்ளுண்டது

யூதர்களுக்குப் பன்றியென்றால் மிகவும் அருவருப்பானது. இதைக் கொண்டு வந்து பலி செலுத்தும் போது எவ்வளவு பயங்கரமான காரியத்தைச் செய்திருக்கின்றான்; பொல்லாதவன். இந்தப் பாழாக்கும் அருவருப்பைக் குறித்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தானியேல் புஸ்தகத்தில் உள்ளதைச் சொல்லியிருக்கிறார்.

மத் 24:15

மேலும், பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே. வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன். நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது,

நாம் சிந்தித்துப் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்; பாழாக்கும் அருவருப்பு பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கும்போது நீங்கள் ஓடிப்போங்கள்: எருசலேம் அழிந்துபோகும் என்று சொல்லியிருக்கிறார். நாம் பைபிளில் கவனிக்கும்போது பாழாக்கும் அருவருப்பு. மூன்று முறை வருகிறது. முதலில் ஆண்டியோகிஸ் எப்பாபினிஸ் முதலாம் பாழாக்கும் அருவருப்பு கி.மு. 167-ம் வருஷத்தில் கர்த்தருக்குப் பலிசெலுத்த வேண்டிய இடத்தில் பன்றியைப் பலி செலுத்தி தீட்டாக்கினான். இதுவே, முதலாம் பாழாக்கும் அருவருப்பு. மறுபடியும் அது சுத்திகரிக்கப்பட்டு ஆராதனைக்கு வந்தது.

கழுகு ரோமராஜ்யத்தின் சின்னம். தீத்து கழுகுஇறக்கைகளோடு வரும்போது ஓடிப்போங்கள்; அது பாழாக்கும் அருவருப்பு என்று இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார். தீத்து தனது சேனைகளோடு வரும்போது நீங்கள் எருசலேமிலிருந்து ஓடிப்போங்கள்; அல்லது நீங்கள் சிக்கிக்கொள்வீர்கள். கர்ப்பவதிகளுக்கும் பால் கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ; வயலில் இருக்கிறவன் அப்படியே ஓடிப்போகக்கடவன் என்றார். அதேபோல் தீத்து வந்து தேவாலயத்தை இடித்துப்போட்டான். ஜனங்கள் உலகமெங்கிலும் சிதறடிக்கப்பட்டார்கள்; தேவாலயம் இடிக்கப்பட்டது; பாழாக்கும் அருவருப்பு வந்து அழித்துப்போட்டது.

இப்பொழுதும், பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. கி.பி.780-ம் வருஷத்திலே ஓமர்மசூதி கட்டப்பட்டது. இப்பொழுதும் இந்த இரண்டாம் பாழாக்கும் அருவருப்பு இருக்கிறது. தேவாலயம் இருந்த அதே இடத்தில் பாழாக்கும் அருவருப்பு இருக்கிறது. சாலமோன் கட்டின தேவாலயத்தைச் செருபாபேல் புதுப்பித்தான்; அது தீத்துவால் இடிக்கப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் காலத்தில் இருந்தது. கி.பி. 70-ல் இடிக்கப்பட்டது. பின்பு ஓமர் மசூதி கட்டப்பட்டு இப்பொழுதும் இருக்கிறது. இதைக் கர்த்தர் பூமியதிர்ச்சியின் மூலம் இடித்துப் போடுவார்.

மறுபடியும் அந்த இடத்தில் ஆலயத்தைக் கட்டும்போது மூன்றாம் முறையாகப் பாழாக்கும் அருவருப்பு வரும்.

2 தெச 2:4

அவன் எதிர்த்துநிற்கிறவனாயும், தேவன் என்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப் படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்.

எனவே கடைசி போப் (Last Pope) அந்தி கிறிஸ்துவாக வரும்பொழுது தேவாலயமானது மறுபடியும் கட்டப்படும். போப்புவின் தயவினால் ஆலயத்தைக் கட்டுவார்கள் அந்த ஆலயத்திலே அந்திக்கிறிஸ்து கடவுளாய் வந்து உட்காருவான். அவன் ஆராதிக்கப்படுவதெதுவோ; அதற்கு மேலாகத் தன்னை உயர்த்தி தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல் உட்காருவான். அது இன்னும் நிறைவேறவில்லை; உபத்திரவ காலத்திலே நடக்கும்.

தானி 9 : 27

அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார்; அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான், நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன்மேல் தீருமட்டும் சொரியும் என்றான்.

பாழாக்கும் அருவருப்பு மூன்று முறை நிறைவேறும். தேவலாயம் மூன்று முறை இடிக்கப்படும். முதலில் நேபுகாத்நேச்சார் இடித்தான் : இரண்டாவது தீத்து இடித்திருக்கிறான் : இப்பொழுது அந்த இடத்தில் ஓமர்மசூதி இருக்கிறது. அதுவும் பூமியதிர்ச்சியினால் இடிக்கப்படும். அதன் பிறகு போப்புவின் தயவினால் அங்கே மீண்டும் தேவாலயம் கட்டப்படும். ஆனால் அதுவும் மூன்றாவது முறையாக இடிக்கப்படும். அதன் பிறகு இயேசுகிறிஸ்துவே ஆட்சி செய்வார். அவரே ஆலயமாய் இருக்கிறார். ஆடு, மாடுகளை பலி செலுத்த வேண்டியதில்லை. இயேசு கிறிஸ்துவே நமக்காக பலியாகிவிட்டார். இனி வேறு பலியில்லை. அந்த ராஜ்யத்தை நாம் எதிர்நோக்கியிருக்கிறோம்.

தானி 8: 10

அது வானத்தின் சேனைபரியந்தம் வளர்ந்து, அதின் சேனையாகிய நட்சத்திரங்களில் சிலவற்றை பூமியிலே விழப்பண்ணி, அவைகளை மிதித்தது.

அந்த சின்னகொம்பு ஆண்டியோகிஸ் IV எப்பாபினிஸ். அந்திகிறிஸ்துவுக்கு அடையாளமாய் இருக்கிறான்.

வெளி 12 : 4

அதின் வால் வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கை இழுத்து, அவைகளைப் பூமியில் விழத்தள்ளிற்று; பிரசவவேதனைப்படுகிற அந்த ஸ்திரீ பிள்ளைபெற்றவுடனே, அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப்போடும்படிக்கு அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது.

இவனே கடைசி போப்புவுக்கு அடையாளமாய் இருக்கிறான். அந்த மிருகம் (போப்) ஏழுதலைகளையும் பத்துக்கொம்புகளையும் உடையதாய் இருந்தது. ஒருகாலத்தில் அது அஞ்ஞான ரோமாபுரியாய் இருந்தது. இப்பொழுது போப்புவின் ரோமாபுரியாய் இருக்கிறது. ரோம் தான் உலகில் கடைசி வல்லரசு. ஒரு காலத்தில் சீசர்கள் ஆண்டார்கள். பின்பு பாபிலோனிய ஆவியும், மேதிய பெர்சிய ஆவியும், கிரேக்க ஆவியும் ஒன்றாய் சேர்ந்து மிக வல்லமையாகவும் கெடிதும் பயங்கரமான மிருகமாகவும் இரும்பாகவும் மாறி எல்லாவற்றையும் நொறுக்கும். ரோம ராஜ்யம் மிக கொடிதான ராஜ்யம் ; பரிசுத்தவான்களைக் கொலை செய்தது. அதிலே பத்து ராஜ்யங்கள் இருந்தது கி.மு. 63-ல் ஆரம்பித்து கி.பி. 476-ல் பத்து ராஜ்யங்களாகச் சிதறப்பட்டது.

வெளி 17 : 9, 10, 11

9. ஞானமுள்ள மனம் இதிலே விளங்கும். அந்த ஏழு தலைகளும் அந்த ஸ்திரீ உட்கார்ந்திருக்கிற ஏழு மலைகளாம்.

10. அவர்கள் ஏழு ராஜாக்களாம்; இவர்களில் ஐந்துபேர் விழுந்தார்கள், ஒருவன் இருக்கிறான், மற்றவன் இன்னும் வரவில்லை; வரும்போது அவன் கொஞ்சக்காலம் தரித்திருக்கவேண்டும்.

11. இருந்ததும் இராததுமாகிய மிருகமே எட்டாவதானவனும், அவ்வேழிலிருந்து தோன்றுகிறவனும், நாசமடையப்போகிறவனுமாயிருக்கிறான்.

அதாவது அந்த ஏழு தலைகளும் ஏழு ராஜாக்கள்; அவர்கள் யாரென்றால், ஜீலியஸ் சீசர், அகஸ்ட்டஸ், கிளாடியஸ், வெஸ்பாசியன், டைட்டஸ், நீரோ, டொமிட்டன் இவர்கள் ஏழு தலைகள். அதாவது ஏழு ராஜ்யங்களாம்.

வெளி 13: 1

பின்பு நான் கடற்கரை மணலின்மேல் நின்றேன். அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பிவரக் கண்டேன்; அதற்கு ஏழு தலைகளும் பத்துக்கொம்புகளும் இருந்தன; அதின் கொம்புகளின்மேல் பத்து முடிகளும், அதின் தலைகளின்மேல் தூஷணமான நாமமும் இருந்தன.

இந்த தூஷணமான நாமம் என்னவென்றால் Vicarius Filli dei. நாம் வெளிப்படுத்தல் 17ஆம் அதிகாரம் 3ஆம் வசனத்தை வாசிக்கும் போது ஏழு தலைகள் பத்து கொம்புகளைக் குறித்துதான் பார்க்கிறோம்.

வெளி 17 : 3

ஆவிக்குள் என்னை வனாந்தரத்திற்குக் கொண்டுபோனான். அப்பொழுது ஏழு தலைகளையும் பத்துக் கொம்புகளையும் உடையதும் தூஷணமான நாமங்களால் நிறைந்ததுமான சிவப்புநிறமுள்ள மிருகத்தின்மேல் ஒரு ஸ்திரீ ஏறியிருக்கக் கண்டேன்.

வெளிப்படுத்தின விசேஷம் 12ஆம் அதிகாரத்திலும், 13-ஆம் அதிகாரத்திலும், 17-ஆம் அதிகாரத்திலும் இந்த ஏழு தலைகள் பத்து கொம்புகள் குறித்து திரும்பத்திரும்ப பார்க்கிறோம். அந்த ஏழு தலைகள் என்னவென்று பார்த்தோம்.

அதன் பின்பு பத்துக் கொம்புகள் என்று சொல்லும்போது ரோம ராஜ்யமானது பத்து ராஜ்யங்களாக உடைக்கப்பட்டது. அந்த ராஜ்யங்கள் தான் கிரேட் பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்பெயின், சுவிட்ஸ்சர்லாந்து, போர்ச்சுகல், இத்தாலி, அதன் பின்பு மூன்று சிறிய ராஜ்யங்கள் வேண்டல்ஸ், ஹெருலி, அஸ்ட்ரகோஸ், இந்த மூன்று கொம்புகளை அந்த சின்ன கொம்பு (போப்) பிடுங்கிப்போட்டது. எனவே தான் ஏழு பிரதானமான ராஜ்யங்கள் இப்போதும் இருக்கிறது. அந்த மிருகத்திலிருந்த ஏழு கொம்புகளின் மேல் ஏழு முடிகள் என்றால் ஏழு ராஜாக்கள் இருந்தார்கள் என்று அர்த்தம். ஏழு சீசர்கள் அதைப் பத்தாகப் பிரித்துப் பத்து ராஜ்யங்களாகப் பிரிந்தது.

வெளி 13 : 3,4

3. அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட்டிருக்கக் கண்டேன்; ஆனாலும் சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி,

4. அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங்கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினார்கள். அல்லாமலும்: மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? அதினோடே யுத்தம்பண்ணத்தக்கவன் யார்? என்று சொல்லி, மிருகத்தையும் வணங்கினார்கள்.

அந்த மிருகம்தான் கடைசி போப், அந்திகிறிஸ்து வலுசர்ப்பம் தான் பிசாசு, பிசாசையும் வழிபடுகிறார்கள், போப்புவையும் வழிபடுகிறார்கள். அவன் தன்னை ஆராதிக்கும்படியாக சொல்லுவான். பாபிலோனிய மார்க்கம், நிம்ரோத்தின் மார்க்கம் : ராஜாவைக் கடவுளாக வழிபடுகிற மார்க்கம். தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல் உட்கார்ந்து தன்னை எல்லாரும் வணங்கும்படிச் செய்வான். அதுதான் எட்டாவது மிருகம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

வெளி 17:11

இருந்ததும் இராததுமாகிய மிருகமே எட்டாவதானவனும், அவ்வேழிலிருந்து தோன்றுகிறவனும், நாசமடையப்போகிறவனுமாயிருக்கிறான்.

அருமையானவர்களே! அவ்விதமான ஒரு காலம் வரப்போகிறது. அது சாவுக்கேதுவாகக் காயப்பட்டதென்றால் அந்த ரோம ராஜ்யம் அழிந்து போனது. அது சொஸ்தமாக்கப்பட்டதென்றால் ரோம ராஜ்யம் அழிந்து போப்புவின் ரோமாபுரியாக மாறினது. கி.பி. 586-ல் போப்புவின் ரோமாபுரி ஆரம்பித்து இன்று உலகத்தில் 124 கோடி மக்கள்; சகல ஜனங்களிலும், பாஷைக்காரரிலும், கோத்திரங்களிலும் ஜனக்கூட்டங்களில் இருந்து கத்தோலிக்க மார்க்கமாய் மாறியிருக்கிறது.

இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஜெர்மனி இரண்டாகப் பிரிந்து மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி என்று பிரிந்து, கிழக்கு ஜெர்மனி கம்யூனிஸ்ட்காரர்களிடம் போய்விட்டது. எனவே, கிழக்கு ஜெர்மனி, மேற்கு ஜெர்மனி என்று பிரித்து நடுவில் 155 கிலோமீட்டருக்கு கான்கிரீட் சுவரை 13.08.1961-ல் அமைத்தார்கள். அதன் உயரம் 11.8 அடி இதைக்குறித்து தீர்க்கதரிசி. சகோ. பிரன்ஹாம் **"கடைசிகால வித்தின் அடையாளம்"** என்ற செய்தியில் 19.03.1962 அன்று என்ன சொல்லியிருக்கிறாரென்றால், ரோம் எழுப்புதல் ஏற்படும், அந்தச் சுவர் இடிக்கப்பட்டு கிழக்கு ஜெர்மனி, மேற்கு ஜெர்மனி ஒன்றாக மாறும். அந்தச்சுவர் கட்டின அடுத்த வருஷமே சொல்லியிருக்கிறார். அவர் உரைத்த தீர்க்கதரிசனமானது, 09.11.1989 அன்று நிறைவேறிவிட்டது. இரண்டு ஜெர்மனியும் ஒன்றாக மாறிவிட்டது, கம்யூனிசம் தோல்வியுற்றது.

பின்பு முன்னால் இருந்த அந்த ரோமராஜ்யம் போப்புவின் ஆதிக்கத்தில் இருந்ததைப் போலவே மறுபடியும் வரும். இப்போது ஐரோப்பிய ஐக்கிய நாடுகள் என்று ஆரம்பித்திருக்கிறார்கள். இதில் முன்னால் குறிப்பிட்ட பத்து நாடுகளும் இருக்கிறது. இவர்கள் தங்களுடைய ராஜ்யத்தை அந்தி கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுப்பார்கள் என்பதை வெளிப்படுத்தல் 17-ஆம் அதிகாரம் 12ஆம் வசனத்தில் காணலாம்.

வெளி 17 : 12

நீ கண்ட பத்துக் கொம்புகளும் பத்து ராஜாக்களாம்; இவர்கள் இன்னும் ராஜ்யம் பெறவில்லை; இவர்கள் மிருகத்துடனேகூட ஒருமணி நேரமளவும் ராஜாக்கள்போல அதிகாரம் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

அப்பொழுது போப் பழையபடி பத்து ராஜ்யங்களை ஆளுகைச் செய்வார். அந்த சின்ன கொம்பு மிக வல்லமையாக வரும். ஆண்டியோகிஸ் IV எப்பாபினிஸ் இதற்கு ஒரு அடையாளம். கடைசி போப் வரும்போது உலகமனைத்தும் அவனுடைய கட்டுப்பாட்டுக்குள் வரும்போது, அந்த மிருகத்தை (போப்பை) அனைவருமே வணங்குவார்கள்.

நெப்போலியன், போப்புவை ஜுலை மாதம் 5-ஆம் தேதி 1808-ஆம் வருஷத்தில் (05.07.1808) சிறைபிடித்து, நீ ராஜாக்கள் மேல் அதிகாரம் செலுத்தக்கூடாது. மதத்தை மட்டும் கவனித்துக்கொள் என்று கட்டளை கொடுத்தான். இதைக் குறித்து நாம் பைபிளில் பார்க்கிறோம். சிறைபடுத்திக் கொண்டு போகிறவன்; சிறைப்பட்டுப் போவான்; பட்டயத்தினாலே பரிசுத்தவான்களைக் கொலை செய்தவன்; பட்டயத்தினாலே கொல்லப்படவேண்டும். பரிசுத்தவான்களின் பொறுமையும் விசுவாசமும் இதிலே விளங்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

எனவே, நாம் எந்த நேரத்தில் இருக்கிறோம் என்பதை கவனிக்க வேண்டும். இப்பொழுது இருப்பும் களிமண்ணுமான காலத்தில் இருக்கிறோம். இரும்பு ரோம ராஜ்யம். அது உலகம் அழியும் வரை இருக்கும். போப்புவின் ஆதிக்கத்தின் கீழ் உலகமெங்கிலும் பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் அதிகமாக இருக்கிறது. குறிப்பாக தமிழ்நாட்டிலும் உள்ளது.

உலகத்தில் சில நாடுகள் முழுவதுமாக கத்தோலிக்க நாடுகளாக இருக்கிறது. தென் அமெரிக்காவில் உள்ள நாடுகள் முக்கால் பகுதி கத்தோலிக்க நாடுகள்தான். பிலிப்பைன்ஸ் கத்தோலிக்க நாடு. அந்த மிருகத்துக்குச் சமமானவர் யாருமே கிடையாது. உலகத்தின் பொருளாதாரத்தைச் சரி செய்ய போப்புவால் மட்டும்தான் முடியும் ; வேறு யாராலும் முடியாது.

போப்பு தலைவராக மாறும்போது மிருகத்தை அனைவரும் வணங்குவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

வெளி 13 : 8

உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்..

உலக நாடுகள் எல்லாமே போப்புவுக்கு அடிபணிய வேண்டும். ஏதோ ஒரு சூழ்நிலையில் அவர்கள் வணங்க வேண்டியது வரும். அப்பொழுது நாம் இங்கே இருக்கமாட்டோம். ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுஸ்தகத்தில் நமது பெயர் இருக்கிறது. எனவே, நாம் மேலே எடுத்துக் கொள்ளப்படுவோம். நாம் ஏழு வருஷங்கள் கல்யாண விருந்திலே (Wedding Feast) இருக்கும்போது; உலகத்தை அந்திகிறிஸ்து ஆளுவான்.

வெளி 12:12

ஆகையால் பரலோகங்களே! அவைகளில் வாசமாயிருக்கிறவர்களே! களிகூருங்கள். பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே! ஐயோ, பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலமாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்துவரும் என்று சொல்லக்கேட்டேன்.

உலகத்திலே இதுவரை நடக்காத மகா உபத்திரவகாலம் வரும். யாரெல்லாம் மிருகத்துக்கு விரோதமாய் எதிர்த்து நிற்பார்களோ; அவர்களெல்லாரும் கொலை செய்யப்படுவார்கள், மற்றவர்கள் மிருகத்தை வணங்குவார்கள்.

இந்தப்பிசாசின் ஆவியைத்தடை செய்வது மணவாட்டிதான். வெளிச்சம் போய்விட்டால் இருள் சூழ்ந்துவிடும். போப் வரும்போது வெள்ளைக்குதிரை (மதவல்லமை) சிவப்புக்குதிரை (அரசியல் வல்லமை) மற்றும் கருப்புக்குதிரை (பிசாசின் வல்லமை) இந்த மூன்று வல்லமைகளும் ஒன்றாய் சேரும்போது மங்கின நிறமுள்ள குதிரை உண்டாகிறது.

வெளி 6 : 7, 8

7. அவர் நாலாம் முத்திரையை உடைத்தபோது, நாலாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லுஞ் சத்தத்தைக் கேட்டேன்.

8. நான் பார்த்தபோது, இதோ, மங்கினநிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர்; பாதாளம் அவன்பின் சென்றது. பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்டமிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலைசெய்யும்படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது.

மேலே குறிப்பிட்ட மூன்று வல்லமைகளும் ஒன்றாய் சேர்ந்தது போலவே, தேவனுடைய ஏழு ஆவிகளும் முழுமையாய் நம் மேல் ஊற்றப்பட்டுள்ளது. அவருடைய சிங்காசனத்திலிருந்து ஏழு ஆவிகளும் இன்று நமக்கு வந்திருக்கிறது. இந்தப் பரிசுத்தாவியின் வல்லமை நம்மை மேலே கொண்டு செல்லும்போது, பிசாசின் ஆவியின் வல்லமை உலகத்தின் மேல் இறங்கும். கடைசியில் உலகத்தைக் கத்தோலிக்க சபை (ஒருபெண்) ஆளுகை செய்யும், ஒரு சபை என்பது ஒரு பெண்ணுக்கு அடையாளமாய் இருக்கிறது.

வெளி 17 : 3

3. ஆவிக்குள் என்னை வனாந்தரத்திற்குக் கொண்டுபோனான். அப்பொழுது ஏழு தலைகளையும் பத்துக் கொம்புகளையும் உடையதும் தூஷணமான நாமங்களால் நிறைந்ததுமான சிவப்புநிறமுள்ள மிருகத்தின்மேல் ஒரு ஸ்திரீ ஏறியிருக்கக் கண்டேன்

வெளிப்படுத்தல் 13-ஆம் அதிகாரமும் முதல் வசனத்தில் தூஷணமான ஒரு நாமம் என்று சொல்லும்போது, அது தேவனுடைய குமாரனுக்குப் பதிலாக ஆட்சி செய்கிறவர் (விக்காரஸ் பிலிடி) (VICARIUS FILLI DEI) என்பது போப்புவின் கிரீடத்தில் இந்தப் பெயர் இருக்கிறது.

ஆனால் வெளி 17 : 3-ல் தூஷணமான நாமங்கள் என்று இருக்கிறது. இது எதைக் குறிக்கிறதென்றால் பலவிதமான ஸ்தாபனங்களைக் குறிக்கிறது. (CSI, A.G. R.C. UPC, IPC, Pentecost etc) இவைகள்தான் தூஷணமான நாமங்கள் இந்த தூஷணமான நாமங்கள் மேல் ஒரு ஸ்திரி (R.C. Pope) ஏறியிருக்கிறாள். இன்றைக்கு உள்ள கிறிஸ்தவர்கள் தங்கள் ஸ்தாபன பெயர்களைச் சொல்லுகிறார்கள். நாம் எந்த ஸ்தாபனத்தையும் சேர்ந்தவர்கள் கிடையாது. ஸ்தாபனங்கள் எல்லாம் முடிவில் கத்தோலிக்க மார்க்கத்தின் கீழ் நிற்கும். ஆனால் நாம் உண்மையான கிறிஸ்தவர்களாய், உண்மையான மணவாட்டியாய் இருக்கிறோம்.

வெளி 17: 5,6

5. மேலும், **இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய்** என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது.

6. அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறிகொண்டிருக்கிறதைக் கண்டேன்; அவளைக் கண்டு நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன்.

இந்தப் பெண்ணாகிய கத்தோலிக்கசபை உலகத்தை ஆளும். மணவாட்டி சபையும் (Bride Church) ஒரு பெண் தான். இதில் நாம் ஒரு பாகமாய் இருக்கிறோம். உலகில் இருக்கும் துன்மார்க்கர் யாவரும் அழிந்த பின் முடிவில் கர்த்தர் இந்த உலகத்தைப் புதுப்பித்து இதை மணவாட்டி ஆளும்படி செய்வார். மணவாட்டி சபை ஆணில் ஆரம்பித்து பெண்ணில் முடிகிறது. இயேசுகிறிஸ்து ஆணாய் இருக்கிறார். சபை பெண்ணாய் இருக்கிறது.

அதேபோல் சாத்தானும் கத்தோலிக்க மார்க்கத்திற்கும், தூஷணமான நாமங்களைக் கொண்ட சபைகளுக்கும் (பெண்) மணவாளனாய் இருப்பான். இவர்கள் அவனுக்கு மணவாட்டியாய் இருப்பார்கள். சாத்தானுடைய மணவாட்டியும் ஆளுகை செய்வாள். எவ்வளவு காலமென்றால் மூன்றரை வருஷம் மட்டும்தான். ஆனால் நாம் நம் மணவாளனோடு ஆயிரம் வருடம் ஆளுகை செய்வோம்

வெளி 19 : 8

சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லியவஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே.

கர்த்தர் நம்மை அழைத்தார்; நம்மைத் தெரிந்து கொண்டார்; நம்மைப் பரிசுத்தப் படுத்தினார்; நம்மை அபிஷேகித்தார்; நாம் அவருடைய பிள்ளைகளாய் இருக்கிறோம். நம்முடைய பெயர் ஆட்டுக் குட்டியானவருடைய ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது. இதெல்லாம் அவருடைய நீதி; நம்முடைய நீதியோ தேவனுடைய கிருபையைச் சார்ந்திருப்பதாக இருக்கிறது.

தேவனுடைய நீதியைத் தேடாமல் நாங்கள் ஒடிசா போனோம். கல்கத்தா, பாம்பே, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் உலகில் பல நாடுகளுக்குப் போய் பிரசங்கம் பண்ணினோம் என்று பெருமையாகப்பேசித் தங்களைப் பெரிய போதர்களாகக் காண்பித்தால் அது அவர்களுடைய நீதியாகும். இந்த நீதியினால் பரலோக ராஜ்யம் போக முடியாது. இயேசு கிறிஸ்துவினுடைய நீதியினால் (தேவனுடைய நீதி) தான்: நாம் பரலோக ராஜ்யம் போக முடியும். அது தான் பரிசுத்தவான்களின் நீதியாய் இருக்கிறது. அந்த வஸ்திரத்தை நாம் தரித்திருக்கிறோம். நம்மைக் குறித்துப் பெருமை பாராட்டுவதற்கு ஒன்றுமில்லை; எல்லாம் கர்த்தருடைய கிருபை.

அந்த மிருகத்தை தானியேல் பார்க்கும்போது பொல்லாததாய் இருந்தது. அதேபோல் தான் போப்புவின் ரோமாபுரியும் பொல்லாததாய் இருந்தது. அவன் உபத்திரவக்காலத்திலே உலகத்தை ஆளுகைச் செய்வான். ஆனால் நாம் ஆயிரம் வருடம் உலகத்தை ஆளுகை செய்வோம். அதன் பின்பு வெள்ளைசிங்காசனம் நியாயத்தீர்ப்பு (White Throne Judgment)

தானி 9 : 27

அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார்; அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான், நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன்மேல் தீருமட்டும் சொரியும் என்றான்.

இந்த வசனம் இயேசு கிறிஸ்துவுக்கும் பொருந்தும். சாத்தனுக்கும் பொருந்தும். (Compound Meaning) அது எப்படியென்றால் ; இயேசு கிறிஸ்து இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஒரு வாரம் (7வருஷம்) கொடுக்கிறார். ஏற்கனவே 31/2 வருஷம் முடிந்து போயிற்று இயேசுகிறிஸ்து 31/2 வருஷம் உலகத்தில் ஊழியம் செய்தபோது அனேகருக்கு அவர் உடன்படிக்கையை உறுதிப்படுத்தினார். அதன் பின் தேவாலயம் இடிக்கப்பட்டது. பலியும், காணிக்கையும் ஒழிந்து போயிற்று. இன்னும் மூன்றரை (31/2) வருடம் இருக்கிறது. அந்த 31/2 வருடத்தில் இரண்டு சாட்சிகளின் ஊழியத்தின் மூலம் 1,44,000 பேர் முத்தரிக்கப்படுவார்கள்.

சாத்தானுக்கும் ஏழு வருடங்கள் இருக்கிறது. அவன் 31/2 வருடம் உடன்படிக்கையை உறுதிப்படுத்துவான். அதன் பிறகு மிருகத்தின் முத்திரையைக் கொண்டுவருவான். தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல் உட்கார்ந்து ; பலியையும் காணிக்கையையும் ஒழியப் பண்ணுவான். அந்த 31/2 வருட உபத்திரவ காலத்தில் 1,44,000 பேர் முத்தரிக்கப்படுவார்கள்.

வெளி 13 : 16,17,18

16. அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும்,

17. அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக்கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்கும் செய்தது.

18. இதிலே ஞானம் விளங்கும்; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப்பார்க்கக்கடவன்; அது மனுஷருடைய இலக்கமாயிருக்கிறது; அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு.

அந்த மிருகத்தின் முத்திரையைத் தங்களின் வலதுகையிலாவது; தங்கள் நெற்றியிலாவது தரிக்காவிட்டால் கொள்ளவும், விற்கவும் முடியாது. உதாரணத்திற்கு நாம் வசிக்கும் இடம் மாநகராட்சியாக மாறுமென்றால் எல்லாவற்றையும் பதிவு செய்ய எண்கள் உள்ளது. பாதாளச் சாக்கடைக்குப் பணம் கட்ட வேண்டுமென்றாலும், மெட்ரோ வாட்டருக்குப் பணம் கட்ட வேண்டுமென்றாலும் இணையதளத்தில் (Internet) நம்முடைய எண் (Number) வர வேண்டும். முற்காலத்தைப் போல் இப்பொழுது கிடையாது.

அது மட்டுமல்லாமல் இப்பொழுது எல்லாவற்றிற்கும் பான்கார்டு (Pan Card) அவசியமாக இருக்கிறது. அது இல்லாமல் எதையும் வாங்கவும், விற்கவும் முடியாதபடி அரசாங்கம் செய்து வருகிறது. உலகம் முழுவதும் ஒரு மனுஷனுடைய கட்டுப்பாட்டுக்குள் வரும்போது (One World Government) நாம் இங்கே இருக்க மாட்டோம். நாம் எடுத்துக் கொள்ளப்படுவோம்.

வெளி 13:18

இதிலே ஞானம் விளங்கும்; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப்பார்க்கக்கடவன்; அது மனுஷருடைய இலக்கமாயிருக்கிறது; அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு.

அந்திக்கிறிஸ்துவுக்கும் ஏழு வருடங்கள் கொடுக்கப்படுகிறது. முதல் மூன்றரை வருடம் எந்த உபத்திரவமும் இல்லாமல் உலகத்தை ஆளுவான். அடுத்த மூன்றரை வருடத்தை மகாஉபத்திரவகாலமாகக் கொண்டு வருவான். இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஏழு வருடங்கள் கொடுக்கப்படுகிறது. ஆனால் நமக்கு 2000 வருடங்கள் கொடுக்கப்படுகிறது.

**இதுவரை நான்கு ராஜ்யங்களின் முடிவை நாம் பார்த்தோம். அடுத்தபடியாக மனுஷகுமாரனுடைய ஊழியத்தைப் பார்ப்போம்.**



தானியேல் 7:13

இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, மனுஷ குமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார்.

இராத்தரிசனங்களிலே மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் (Son of Man) வானத்தின் மேகங்களுடனே வந்தார். அவர் நீண்ட ஆயுசுள்ளவரின் இடம் மட்டும் வந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தானியேல் : 7: 9,10,13,14

9. நான் பார்த்துக்கொண்டிருக்கையில், சிங்காசனங்கள் வைக்கப்பட்டது; நீண்ட ஆயுசுள்ளவர் வீற்றிருந்தார்; அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போலவும், அவருடைய சிரசின் மயிர் வெண்மையாகவும் பஞ்சைப்போல துப்புரவாகவும் இருந்தது; அவருடைய சிங்காசனம் அக்கினிஜுவாலையும், அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புமாயிருந்தது.

10. அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடினது; ஆயிரமாயிரம்பேர் அவரைச் சேவித்தார்கள்; கோடாகோடிபேர் அவருக்கு முன்பாக நின்றார்கள்; நியாயசங்கம் உட்கார்ந்தது; புஸ்தகங்கள் திறக்கப்பட்டது.

13. இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார்.

14. சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரீகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும் அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்.

தானியேல் தரிசனமாகக் காணும்பொழுது நீண்ட ஆயுசுள்ளவர்: நியாயாதிபதியாகவும், ராஜாவாகவும் இருக்கிறார். கோடான கோடிபேர் அவருக்கு முன்பாக இருந்து சேவை செய்கிறார்கள். நான்கு ராஜ்யங்களும் முடிவடைந்தபின் அவர் இவ்வாறு தோன்றுகிறார்.

மனுஷகுமாரனுடைய சாயலுக்கு ஒப்பான ஒருவர் மேகங்களுடனே வருகிறார். மற்றொருவர் நீண்ட ஆயுசுள்ளவர். இதனை நாம் கூர்ந்து கவனிக்கும்போது ஒருவர் பிதா;மற்றொருவர் குமாரன் ; என்று தனித்தனியாக இரண்டு கடவுள் இருப்பது போல் தெரிகிறது.

வெளி . 5 : 6,7,8,9,10

6. அப்பொழுது, இதோ, அடிக்கப்பட்டவண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக்கண்டேன்; அது ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாயிருந்தது; அந்தக்கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம்.

7. அந்த ஆட்டுக்குட்டியானவர் வந்து, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலதுகரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கினார்.

8. அந்தப் புஸ்தகத்தை அவர் வாங்கினபோது, அந்த நான்கு ஜீவன்களும், இருபத்துநான்கு மூப்பர்களும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும், பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக்கொண்டு, ஆட்டுக்குட்டியானவருக்குமுன்பாக வணக்கமாய் விழுந்து:

9. தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு,

10. எங்கள் தேவனுக்குமுன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோமென்று புதிய பாட்டைப் பாடினார்கள்.

ஸ்தாபன கிறிஸ்தவர்கள் இதை வாசிக்கும்போது அவர்கள் நம்மைப் பார்த்து இயேசு கிறிஸ்து மட்டும்தான் என்று சொல்கிறீர்களே அப்படியென்றால் இந்த நீண்ட ஆயுசுள்ளவர்; யார்? என்றும், அவர் பிதா என்று சொல்வதற்கும் இது சரியாகப் பொருந்துகிறது. இது அவர்களுக்குக் குழப்பமாகவே இருக்கிறது. நமக்கோ இது தெளிவைத் தருகிறது. ஏனெனில் நாம் ஒரே தேவனை விசுவாசிக்கிறோம். முதலில் குமாரனை அனுப்பினார் என்று சொல்லப்பட்டிருக்கிறதே அப்படி என்றால் என்ன அர்த்தம்? பிதாவுக்குக் குமாரன் உண்டா? இல்லை. அவர் தாயும், தகப்பனும், வம்ச வரலாறும் இல்லாதவர் ; மாம்சத்தில் வரும்போது அவர் சரீரம்தான் குமாரன் (God in His Son, God in His Body) குமாரனுடைய சரீரம் தான் பிதா, அந்த ஆட்டுக்குட்டியானவரே மனுஷக் குமாரனாய் இருக்கிறார்.

<u>தானி 7 : 14</u>

14. சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரீகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும் அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்.

கர்த்தத்ததுவமும் அவர் மகிமையும் மனுஷகுமாரனுக்கு ஒப்பானவருக்குத் தான் கொடுக்கப்பட்டது என்று எழுதப்பட்டிருக்கிறது. எனவே ஸ்தாபன மக்கள் குழம்பியிருக்கிறார்கள் நமக்கோ குழப்பம் இல்லை. அவர் இரட்சகர்; என்ற தன்மையிலிருந்து நியாயாதிபதியாக இருக்கிறார். (The Attribute of Saviour and Judge) இதைப் பார்க்கும் போது சினிமாவில் ஒரே மனிதன் இரட்டை வேடமாக தகப்பனாகவும், மகனாகவும் நடிப்பான். நாம் சினிமா பார்க்கவில்லை; மற்றவர்கள் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். இந்தக் காட்சிதான் சிங்காசனத்தில் நியாயாதிபதியாக இருப்பது.

அவர் மேய்ப்பன் போல் ஆட்டை வைத்திருக்கிறார்; அவர் துக்கம் நிறைந்தவர்; அவர் அதிக சாந்தமானவர்; நமக்காகச் சிலுவையில் அறையப்பட்டார். அப்படித்தான் உலகம் நினைத்துக் கொண்டு இருக்கிறது. ஆனால் இயேசு கிறிஸ்து நியாயாதிபதியாகவும், ராஜாவாகவும் இருக்கிறார். அவரைப் பார்த்து பயந்து நடுங்க வேண்டும். முழங்கால் யாவும் முடங்கும், நாவுகள் யாவும் அவரை அறிக்கைப் பண்ணும்; அவர் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்த கர்த்தர்; இப்போது அவர் இரட்சகரராய் இருக்கிறார். இனி அவர் நியாயாதிபதியாய் வரப்போகிறார். (The attribute of Saviour and Judge merging together)

ஒரு நாளில் இந்த இரண்டு தன்மைகளையும் கொண்ட ஒரே தேவன் வெளிப்படுவார். (Two Attributes of One God) பிதா குமாரன் பரிசுத்தாவி என்னும் மூன்று தன்மைகளும் இயேசு கிறிஸ்துவுக்குள் ஒன்றாய் மாறுகிறது. இதை நாம் வெளிப்படுத்தல் முதலாம் அதிகாரத்தின் சில வசனங்கள் மூலம் உறுதிப்படுத்தலாம்.

<u>வெளி 1 : 14, 15, 16, 17, 18</u>

14. அவருடைய சிரசும் மயிரும் வெண்பஞ்சைப்போலவும் உறைந்த மழையைப்போலவும் வெண்மையாயிருந்தது; அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப் போலிருந்தது;

15. அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம்போலிருந்தது; அவருடைய சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப் போலிருந்தது.

16. தமது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருந்தார்; அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது; அவருடைய முகம் வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப் போலிருந்தது.

17. நான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தேன்; அப்பொழுது அவர் தம்முடைய வலதுகரத்தை என்மேல்வைத்து, என்னை நோக்கி: பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்;

18. மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்.

இவ்வசனங்களில் சொல்லப்பட்டவர் இயேசுகிறிஸ்து. அவருக்குள் இரண்டு தன்மைகளும் ஒன்றாய் இருப்பதை நாம் காணலாம். உதாரணமாக, நான் ஒரு காலத்தில் வாலிபனாக இருந்தேன். இன்று தகப்பன் என்ற ஸ்தானத்தைக் கடந்து ; என் பேரப்பிள்ளைகளுக்குத் தாத்தாவாக மாறிவிட்டேன். அன்றைக்கு இருந்த படம் வேறு; இன்றைக்கு இருக்கும் படம் வேறு ; ஆனால் ஆள் ஒன்றுதான். அதேபோல்தான் இயேசுகிறிஸ்துவும் இரட்சகர் என்ற ஸ்தானத்திலிருந்து நியாயாதிபதி என்ற ஸ்தானத்திற்கு வருவது.

உலகம் இயேசுகிறிஸ்துவை மிகவும் சாதுவானவர் ; மிகவும் தாழ்மையானவர். எனவே நாம் அவரை என்ன வேண்டுமோனாலும் பேசலாம் கிறிஸ்தவர்கள் எல்லா தவறையும் மன்னிப்பார்கள்; அவர்களுக்கு விரோதமாய் என்ன வேண்டுமென்றாலும் பேசலாம் என்று நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள், இயேசுவோடு நாமும் உலகத்தை நியாயந்தீர்ப்போம் என்பதை அறியவில்லை.

இயேசுகிறிஸ்துவுக்கு அன்பான சீஷனாக இருந்த யோவான்; அவர் மார்பிலே சாய்ந்து கொண்டு யார் உம்மைக் காட்டிக் கொடுப்பான் என்று கேட்டவன்; அவ்வளவு நெருங்கிய சீஷனாய் இருந்தவன் இப்பொழுது பத்முதீவிலே கி.பி. 95-96 ல் இக்காட்சியைக் காணும்போது அவன் செத்தவனைப் போல ஆனான்.

வெளி 1:17

நான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தேன்; அப்பொழுது அவர் தம்முடைய வலதுகரத்தை என்மேல்வைத்து, என்னை நோக்கி: பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்;

அவர் மேலான நீதியுள்ள நியாயாதிபதி; உலகத்தில் உள்ள எல்லா நீதிமன்றத்தைக் காட்டிலும் மேலான நீதிமன்றம் மேலே (பரலோகத்தில்) உள்ளது. இயேசுகிறிஸ்துவே அதற்கு நியாயாதிபதியாய் இருக்கிறார்.

வெளி 20: 11,12

11. பின்பு, நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்; அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்றுபோயின; அவைகளுக்கு இடங்காணப்படவில்லை.

12. மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்.

எடுத்துக்கொள்ளப்படுதலில் (Rapture) மேலே எடுத்துக்கொள்ளப்படத் தகுதியில்லை என்றால் கீழே கைவிடப்பட்டு அந்திகிறிஸ்துவின் காலத்தில் சாத்தானுக்கு எதிர்த்து நின்று ; இரத்த சாட்சியாக மரித்து ; வெள்ளைச் சிங்காசனத்திற்கு முன்பாக வந்து இயேசுகிறிஸ்துவிடம் முறையிட வேண்டும். நான் கர்த்தருடைய வார்த்தைக்காக நின்றேன் நித்திய ஜீவனை எனக்குத் தாரும் என்று முறையிடவேண்டும். இப்பொழுது நாம் தகுதியாய் இருந்தால் உடனே போய்விடலாம்.

இயேசுவோடு அவருடைய மணவாட்டியும் சேர்ந்து நியாயந்தீர்ப்பாள்; ஆயிரமாயிரம் பேராகிய மணவாட்டி அவரோடு நிற்பார்கள். ஆனால் நியாயந்தீர்க்கப்பட வேண்டிய கோடான கோடிபேர் அங்கே அவர்களுக்கு முன்பாக நிற்பார்கள். அவர்களை இயேசுவோடு சேர்ந்து மணவாட்டியாகிய நாம் நியாயந்தீர்ப்போம்.

வெள்ளைச் சிங்காசனத்திற்கு முன்பாக எல்லோரும் நிற்கவேண்டும். சமுத்திரமும், பாதாளமும் மரணமும் தங்களிலுள்ள மரித்தவர்களை ஒப்புக்கொடுத்தன. அவர்களின் கிரியைகளின் படியே நியாயந்தீர்க்கப் பட்டார்கள். இயேசு அங்கே ராஜாவாகவும், நியாயாதிபதியாகவும் இருக்கிறார். (He is the King and the Judge) முன்பு இரட்சகராக மாம்சத்திலே வந்து சிலுவையில் மரித்த இயேசுகிறிஸ்து அசட்டைப்பண்ணப்பட்டவரும், புறக்கணிக்கப்பட்டவரும், அடிக்கப்படும் ஆட்டைப்போல் கொண்டுபோகப்பட்டார். அவருக்கு அழகுமில்லை; சௌந்தரியமும் இல்லை; அவர் மேய்ப்பனாய் இருந்து நியாயாதிபதியாய் மாறும்போது நாம் அவரோடு கூட நியாயந்தீர்ப்போம்.

**சகோ. பிரன்ஹாம் "பத்மு தரிசனம்"** என்ற செய்தியில் அவரே ராஜா; அவரே கர்த்தர்; அவரே ஆட்டுக்குட்டி : பிதா குமாரன் பரிசுத்தாவி எல்லாமே இயேசுகிறிஸ்து தான் என்று சொல்கிறார். தேவனின் தன்மைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து இயேசுகிறிஸ்துவில் முடிகிறது. இப்போது அவர் பல தன்மைகளில் தம்மை வெளிப்படுத்துகிறார்.

வெளி 21: 3,4

3. மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.

4. அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது.

தேவன் இந்த உலகத்தை ஆதியிலே ஏதேன் எந்த நிலையில் இருந்ததோ அதே நிலைக்குத் திரும்ப சிருஷ்டித்து : இழந்து போன எல்லா மிருகங்கள், பறவைகள், மரங்கள் செடிகள் முதலியவற்றை மீண்டும் சிருஷ்டித்து, நல்ல இயற்கை சூழலோடு ஆயிரம் வருட அரசாட்சியில் நமக்குக் கொடுப்பார். நாமும் அவரோடு ஆயிரம் வருட அரசாட்சியில் ஆளுகை செய்வோம்.

இப்பொழுது இந்த நான்கு ராஜ்யத்தையும் அனுமதித்திருக்கிறார். கடைசியாக அந்தி கிறிஸ்து உலகத்தை ஆட்சிசெய்வான். கத்தோலிக்க மார்க்கம் உலகத்தை ஆட்சி செய்யும். கர்த்தர் இந்த வேசி மார்க்கத்தைச் சுட்டெரித்துப் போடுவார். ஒரு நாழிகையிலே அழிந்துபோகும். இந்த பூமியைப் புதுப்பித்து தேவனுடைய ராஜ்யமாக மாற்றி தம்முடைய மணவாட்டிக்குக் கொடுப்பார். அது தான் அவர் நமக்குக் கொடுக்கும் பரிசாக இருக்கிறது. மணவாட்டியாகிய எஸ்தர் ராஜாத்தியே; நீ ராஜ்யத்தில் பாதி கேட்டாலும் உனக்குத் தருவேன் என்று ஆகாஸ்வேரு ராஜா கூறினான். ஆனால் கர்த்தர் நமக்கு முழு ராஜ்யத்தையே தருவேன் என்று சொல்கிறார்.




நாம் அந்த ஏதேனில் இருக்க நமக்குப் பட்டா வேண்டியதில்லை; வரி கட்ட வேண்டியதில்லை; எந்த அடையாளமும் நமக்குத் தேவையில்லை. கர்த்தர் இந்த உலகத்தை ஏதேனாக மாற்றி பரிசுத்தவான்கள் ஆளுகைச் செய்யும்படி பெற்றுத் தருவார்.

தானி. 7 : 18

18. ஆனாலும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள் ராஜரீகத்தைப்பெற்று, என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்றான்.

எவ்வளவு பெரிய சிலாக்கியம் நாம் ஏழு வருடம் பரலோகத்துக்குச் சென்று மறுபடியும் இங்கே வரப் போகிறோம். அந்த நேரத்தில் இவ்வுலகம் ஏதேனாய் இருக்கும். அவரோட கூட நாம் வெள்ளைக்குதிரைகளில் ஏறி வருவோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

வெள்ளைக்குதிரை வல்லமையைக் குறிக்கிறது. வார்த்தையின் வல்லமை நம்மை மேலே கொண்டு செல்லும். வார்த்தையின் வல்லமையினாலே நாம் மறுபடியும் இந்த உலகத்துக்கு வரும்போது, உலகம் ஏதேனாய் இருக்கும். இப்போது காண்கிற கட்டிடங்களெல்லாம் நொறுங்கிப்போகும். வாதைகள், கோபகலசங்கள் ஊற்றப்படும். உலகமே தீட்டுப்பட்டிருக்கிறது இதை நாம் பெறப்போவதில்லை; ஏதேனைப் பெற போகிறோம். நாம் காண்கிற இந்த உலகத்தை முற்றிலும் நிர்மூலமாக்கிவிடுவார் அந்தக் கல் உருண்டு வந்து அந்த இரும்பையும், வெண்கலத்தையும், பொன்னையும், களிமண்ணையும் முற்றிலும் நிர்மூலமாக்கி தாமோ பெரிய ராஜ்யமாய் மாறும் அந்த ராஜ்யம் எதுவென்றால் புதிய எருசலேமாயிருக்கிறது. நாம் அந்த நித்தியத்தை எதிர் நோக்கியிருக்கிறோம்.

வெளி 21 : 16

16. அந்த நகரம் சதுரமாயிருந்தது, அதின் அகலமும் நீளமும் சமமாயிருந்தது. அவன் அந்தக் கோலினால் நகரத்தை அளந்தான்; அது பன்னீராயிரம் ஸ்தாதி அளவாயிருந்தது; அதின் நீளமும் அகலமும் உயரமும் சமமாயிருந்தது.

இந்தப் பட்டணத்தை தேவன் இந்த பூமியிலே ஸ்தாபிப்பார். அதுதான் அந்தக் கல் பெரிய பர்வதமாய் மாறியது. நாலு ராஜ்யங்களும் இருந்த அடையாளமே தெரியாது; சரித்திரத்துக்கு முடிவு ஏற்படும். நாளை என்று ஒரு நாள் ஏற்படப்போவதில்லை; எப்போதும் இன்றுதான்; எப்போதுமே பகல்தான்; அங்கே இராக்காலம் இராது. நாம் கர்த்தருடைய வார்த்தைக்காக நின்றால் எவ்வளவு பலன்கள் நமக்குக் கிடைக்கிறது. அது மட்டுமல்ல அவர் நம்மை நியாயாதிபதியாகவும் மாற்றுவார். ஆயிரம் வருடமும், அந்த ராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்ளும்படி நமக்குத்தருவார். நாம் மரித்தோராகிய பெரியோரையும், சிறியோரையும், நியாயந்தீர்ப்போம் ; தேவதூதர்களையும் நியாயந்தீர்ப்போம் என்று பார்க்கிறோம்.

1 கொரி 6 : 2, 3

2. பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா?

3. தேவ தூதர்களையும் நியாயந்தீர்ப்போமென்று அறியீர்களா? அப்படியிருக்க, இந்த ஜீவனுக்கேற்றவைகளை நீங்கள் தீர்த்துக்கொள்ளக்கூடாதிருக்கிறது எப்படி?

கர்த்தர் அதைச்சம்பாதித்து; அதை நமக்குத் தருகிறார். நாம் நியாயாதிபதியாக மாறவும், ஆசீர்வாதங்களைப் பெறவேண்டுமென்றால் நமக்குச் சில விதிமுறைகள் [Principles] அல்லது தகுதி வேண்டும். என்ன தகுதியென்றால், மற்றவர்களை நியாயந்தீர்க்கப் போகிற நாம் நம்மை நாமே முதலாவது நியாயந்தீர்க்க வேண்டும். நம்மை நாமே நிதானித்துச் சரிப்படுத்திக்கொண்டால் மற்றவர்களை நியாயந்தீர்க்கலாம். இது தான் தேவனுடைய கட்டளை. வேதமும் அதைத்தான் சொல்கிறது. இதை நாம் ஒவ்வொரு இராபோஜன ஆராதனைகளில் வாசிக்கிறோம்.

1கொரி 11 : 31 நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்.

மற்றவர்களின் வாழ்க்கையைக் குறித்து நாம் நியாயந்தீர்க்க; நம்மை நாமே நியாயந்தீர்த்துக்கொள்ள வேண்டும். நம்மிடம் எத்தனையோ தவறுகள், குறைகள், பெலவீனம், அவிசுவாசம் இருக்கிறது. அதை நாம் அறிக்கை செய்து கர்த்தரிடத்தில் ஒப்புரவாகி பின்பு மற்றவர் குறையைக் காணலாம். அப்படி செய்யாதவர்கள் உலகத்தை நியாயந்தீர்க்க முடியாது.

தானியேல் அவன் காலத்தில் வாழ்ந்த ஜனங்களை நியாயந்தீர்ப்பான். அவன் 15 வயதில் பாபிலோனுக்குப் போனான். 70 வருடங்கள் பாபிலோனிலே உயர்ந்த ஸ்தானத்திலே இருந்தான். நான்கு ராஜாக்களின் காலத்திலே அவ்விதமான பதவியில் இருந்தாலும், அவன் தன்னைத்தானே நியாயந்தீர்க்க அறிந்து கொண்டான். எப்படியென்றால்; நான் ராஜாவின் போஜனத்தினால் என்னைத் தீட்டுப்படுத்திக்கொள்ளமாட்டேன் என்று அவன் பொருத்தனை பண்ணிக் கொண்டான்.

ராஜா ஜெபிக்கக் கூடாது என்று கட்டளையிட்டாலும், அவன் ஜெபித்தான். பாபிலோன் ராஜ்யம் செழிப்பான ராஜ்யமாய் இருந்தது. அதின் ராஜா நேபுகாத்நேச்சார் உலகிலே பெரிய ஐசுவரியவான். அது நாகரீகமான பட்டணம்; விக்கிரகங்களை வழிபடுகிற ஒரு நாடு; இவ்விதமான பாபிலோனில் தானியேல் உயர்ந்த பதவியில் இருந்தாலும் தவறு செய்யவில்லை. பெரிய பதவியில் இருக்கிறவர்கள் அதிக தவறுகள் செய்வார்கள். பணம், நாகரீகம் அதிகமாக பாவமும் அதிகமாகும்.

தானியேல் தன்னைத்தானே நிதானித்து அறிந்தான். எப்படியென்றால், நம் முன்னோர்களும், நாமும் செய்த பாவத்தினால்தான் நாம் இந்த பாபிலோனுக்குச் சிறைக்கைதிகளாய் வந்திருக்கிறோம் என்று அறிக்கை செய்து ஜெபம் செய்தான்; பைபிள் படித்து உபவாசித்து ஜெபித்தான். தானியேல் 9-ம் அதிகாரத்தில் தன்னுடைய பாவங்களையும், ஜனங்களுடைய பாவங்களையும் அறிக்கை செய்து ஜெபித்தான் என்று எழுதப்பட்டுள்ளது.

தானியேல் ராஜாவுக்கு முன்பாக நின்று நீர் பொன்னான தலைதான்; ஆனால் தலை வெட்டப்படும்; நான்கு ராஜ்யங்களும் அழிந்து போகும். நானோ தேவனுடைய ராஜ்யத்தைச் சேர்ந்தவனாய் இருக்கிறேன். எனக்குள் இருக்கும் ராஜ்யம்தான் எல்லா ராஜ்யங்களையும் அழிக்கும், நான் பாபிலோன் ராஜ்யமாகிய உம்முடைய ராஜ்யத்தில், உயர்ந்த பதவியில் இருக்கிறேன் என்று நினைக்காதிரும். நான் தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கிறேன். என்னுடைய ராஜ்யம் எல்லா ராஜ்யத்தையும் அழிக்கும்; அந்த தேவனைத்தான் நான் ஆராதிக்கிறேன். உம்முடைய தேவனை நான் ஆராதிப்பதில்லை என்று கூறினான்.

கர்த்தர் இந்தக் கடைசி காலத்தில் ஒரு தீர்க்கதரிசி மூலமாய் வார்த்தையைக் கொடுத்திருக்கிறார். நாம் உலகத்தில் தான் இருக்கிறோம். ஆனால் உலகத்தோடு ஒன்றிணைந்து போவதில்லை; அவர்களைப் போல நாம் ஜீவிப்பது இல்லை. அனேக ஸ்தாபன சபைகள் இருக்கிறது; அவர்களின் உபதேசங்களுக்கு நாம் இணைந்து போவதில்லை. தானியேல் போல் வார்த்தைக்காக நிற்கிறோம். இப்பொழுது நம்மை நாமே நிதானிக்க அறிந்திருந்தால் நாம் இந்த உலகத்தையே நியாயந்தீர்க்க முடியும். நம்முடைய காலத்தில் வாழும் ஜனங்களை நாம் நியாயந்தீர்க்க முடியும். பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள். கிறிஸ்துவோடு கூட வெள்ளை சிங்காசனத்திலே இருந்து நாம் நியாயந்தீர்ப்போம்.

வெளிப்படுத்தின விசேஷமானது தொழுகை செய்கின்ற, ஆராதிக்கப்படுகின்ற, ஆராதனைப்பற்றி எழுதியிருக்கும் புத்தகமாய் இருக்கிறது. (It is a book of worship) எனவே இந்த புத்தகத்தில் இரண்டு ஆராதனைகள் பற்றி எழுதப்பட்டுள்ளது. ஒன்று மிருகத்தை வணங்குவது மற்றொன்று இயேசு கிறிஸ்துவை வணங்குவது. வெளி. 13 : 8-ஆம் வசனத்தையும், வெளி 17 : 8-ஆம் வசனத்தையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது,

<u>வெளி. 13 : 8</u>

8. உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்.

<u>வெளி. 17 : 8</u>

8. நீ, கண்ட மிருகம் முன்னே இருந்தது, இப்பொழுது இல்லை; அது பாதாளத்திலிருந்து ஏறிவந்து, நாசமடையப்போகிறது. உலகத்தோற்றமுதல் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள், இருந்ததும், இராமற்போனதும், இனி இருப்பதுமாயிருக்கிற மிருகத்தைப்பார்த்து ஆச்சரியப்படுவார்கள்.

இந்த இரண்டு புஸ்தகத்திலும் பேர் எழுதப்படாதவர்கள் அந்த மிருகத்தை வணங்குவார்கள்.

நம்முடைய பெயர்கள் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் இருக்கிறது. நாம் மிருகத்தை வணங்கமாட்டோம், இயேசு கிறிஸ்துவையே வணங்குவோம்.

வெளி : 4 : 9, 10, 11

9. மேலும், சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவருக்கு அந்த ஜீவன்கள், மகிமையையும் கனத்தையும் ஸ்தோத்திரத்தையும் செலுத்தும்போது,

10. இருபத்துநான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்குமுன்பாக வைத்து:

11. **கர்த்தாவே**, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர், நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப் பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள்.

நாம் கர்த்தரைக் கொண்டாடி ஆராதிப்போம். ஆனால் டார்வின் என்ன கூறினான் என்றால், உலகம் தற்செயலாய் தோன்றியிருக்கிறது என்று தன்னுடைய கூற்றை; பரிணாமக் கோட்பாட்டைக் கொண்டுக் கூறினான். ஆனால் பரிசுத்தவான்களோ; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர்; உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாக்கப்பட்டவைகளும், சிருஷ்டிக்கப் பட்டவைகளுமாயிருக்கிறது என்று தேவனைத்துதிக்கிறார்கள்.

தொழுது கொள்வதைக் குறித்து அதிகமாய் வெளிப்படுத்தின விசேஷத்தில் எழுதப்பட்டுள்ளது. பூமியின் குடிகளெல்லாம் கடைசியாக மிருகத்தைத் தொழுது கொள்வார்கள். அவர்கள் எல்லாரும் அக்கினி கடலிலே தள்ளப்படுவார்கள். ஸ்தாபன மக்கள் திரித்துவத்தை விசுவாசிக்கும்போது, தேவன் இவர்களை அங்கீகரிப்பதில்லை. என்னுடைய நாமம் விளங்க தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு ஸ்தானம் உண்டு. அந்த ஸ்தலத்திலே என்னுடைய நாமத்தை அல்லது இந்த நேரத்திற்குரிய சத்தியத்தை (The message of the hour) வைத்திருக்கிறேன். அந்த இடத்திலே நீ கர்த்தரைத் தொழுது கொள் என்று உபாகமம் 16 : 2-ல் கர்த்தர் சொல்கிறார்.

உபகாமம் 16 : 2

2. **கர்த்தர்** தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்தில், உன் தேவனாகிய **கர்த்தருக்குப்** பஸ்காவின் பலியாகிய ஆடுமாடுகளைப் பலியிடுவாயாக.

மூன்றில் ஒன்றோனே என்று, பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிப்போம் ; குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை ஸ்தோத்தரிப்போம்; பரிசுத்தாவியாகிய தேற்றரவாளனை ஸ்தோத்தரிப்போம் என்று தேவாதி தேவனை மூன்றாகப் பிரிப்பது சரியான ஆராதனையல்ல. பிசாசின் ஆராதனையாகும்.

சாத்தான் என்ன நினைப்பான் என்றால் என்னுடைய பொய் உபதேசமாகிய திருத்துவத்தை இந்த ஜனங்கள் நம்புகிறார்கள். இந்த ஆராதனை இயேசு கிறிஸ்துவுக்கு அல்ல; எனக்குத்தான் இந்த ஆராதனை; இது என்னுடைய ஆராதனை என்பான். (Worshipping Devil Spirit) அது தான் மிருகத்தை வணங்குவது. அவர்களை அறியாமலே மிருகத்தை வணங்குகிறார்கள்.

போப் கொண்டு வந்த உபதேசத்தை ஸ்தாபன போதகர்கள் எடுத்துக் கொண்டு, வீணான ஆராதனை (Vain worship) செய்யும்போது அதைச்சாத்தான் எடுத்துக்கொள்கிறான். தேவன் தம்முடைய ஸ்தானத்தை இங்கே (The Message of The Hour) வைத்திருக்கிறார். அவர் தமது நாமத்தை இங்கே வைத்திருக்கிறார். அது தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. அவரை நாம் ஆராதிக்கிறோம். அவர் நாமம் என்பது அவருடைய வார்த்தையாய் இருக்கிறது.

இன்று அவருடைய வார்த்தையையும், அவருடைய நாமத்தையும், கர்த்தர் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். (We are Worshipping the Lamb) ஸ்தாபனங்கள் சாத்தானை மறைமுகமாக ஆராதிக்கின்றன. அவர்கள் பெயர்கள் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்திலும், ஜீவபுஸ்தகத்திலும் இல்லை. நம்முடைய பெயர்கள் ஆட்டுக் குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் இருக்கிறது. அப்படியிருந்தால் நித்திய ஜீவன் உண்டு. அப்படி இல்லாதவர்கள் மிருகத்தைத்தான் வணங்குவார்கள்.

இயேசு கிறிஸ்து சொல்கிறார்; நான் உனக்கு ராஜ்யத்தைக் கொடுத்துவிட்டு, பின்பு உன்னை நியாயாதிபதியாய் மாற்றுவேன். வெள்ளை சிங்காசனத்திற்கு முன்பாக கோடான கோடி பேரை நீ நியாயந்தீர்ப்பாய். கடைசியாக அந்த பட்டணத்தை நமக்குப் பரிசாகக் கொடுப்பார். அந்தப்பட்டணம் 1500 மைல் அகலமும், நீளமும், உயரமும் கொண்ட சதுரங்கப்பட்டணம். நாம் அதைச் சுதந்தரித்துக்கொள்வோம்.

நாம் கர்த்தரை நேசித்தும், அவரை ஆராதித்தும் கர்த்தருடைய வார்த்தையைத் தியானித்து; ஜெபித்து வரும்போது கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பதோடு, நாம் எடுத்துக்கொள்ளப்படுதலில் (Rapture) பங்கடைவோம். உலகம் அழிவுக்குள்ளாய் போகும்போது நாம் ஆவிக்குரியவர்களாக மாறவேண்டும். கர்த்தருடைய வருகை சமீபமாகிவிட்டது. தானியேல் பாபிலோனில் கர்த்தருடைய வார்த்தைக்காக சாட்சியாய் நின்று அவரை ஆராதித்து, சேவை செய்தான். அதுபோல் நாம் அனைவரும் இருப்போம்.

**ஆமென்.**